### அமைச்சர் பி.கே. சேகர்பாபு முன்னிலையில்! கொளத்தூர் சட்டமன்றத் தொகுதியில்

# முதல்வரின் கலைக்களம் - மக்கள் முதல்வரின் மனிதநேய விழா - 2025

## கனிமொழி கருணாநிதி எம்.பி. – அமைச்சர் தங்கம் தென்னரசு – கலைஞானி கமல்ஹாசன் – நடிகர் விஜய் ஆண்டனி பங்கேற்பு!






**சென்னை,மார்ச்.6 –**

**கொளத்தூர் சட்டமனற்த் தொகுதியில் அமைச்சர் பி.கே. சேகர்பாபு முன்னிலையில் முதல்வரின் கலைக்களம் மக்கள் முதல்வரின் மனிதநேய விழா - 2025 மார்ச். 7,8,9, ஆகிய தேதிகளில் மாலை 4 மணிக்கு டான்பாஸ்கோ பள்ளி வளாகம், பெரம்பூரில் நடைபெறுகிறது.**

**மனிதநேயம் – 15**

நாள் : 7.3.2025 வெள்ளிக்கிழமை, தலைமை: பகுதி கழக செயலாளர் ஐ.சி.எப். வ.முரளிதரன்,

நாட்டுப்புறக் கலை விழா முதல் நாள் நிகழ்ச்சியை துவக்கி வைப்பவர் நிறுவன தலைவர் - மக்கள் நீதி மையம் கலைஞானி **கமல்ஹாசன்**, நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர்கள்

சென்னை பெருநகர மேயர் பிரியா ராஜன், மாமன்ற உறுப்பினர்கள் சரிதா மகேஷ்குமார், ராஜேஷ்வரி ஶ்ரீதர், தாவூத் பீ, மருத்துவர் ஏ.பி.பூர்ணிமா.

**மனிதநேயம் – 15 அ**

நாள்: 8.3.2025 சனிக்கிழமை தலைமை: தலைமை செயற்குழு உறுப்பினர் கே.சந்துரு, நாட்டுப்புறக் கலை விழா இரண்டாம் நாள் நிகழ்ச்சியை துவக்கி வைப்பவர் நடிகர் - இசையமைப்பாளர் **விஜய் ஆண்டனி**.

**மனிதநேயம் – 15 ஆ**

நாள் : 9.3.2025 ஞாயிற்றுக் கிழமை, தலைமை: சி.ஶ்ரீதணி எம்.சி

நாட்டுப்புறக் கலை விழா மூன்றாம் நாள் நிகழ்ச்சியை துவக்கி வைப்பவர்: அமைச்சர் **தங்கம் தென்னரசு**, கலைஞர்களுக்கு சிறப்பு செய்தல்: கழக துணைப் பொதுச்செயலாளர் **கனிமொழி கருணாநிதி எம்.பி.,** தருமபுர ஆதினம் 27வது குருமகா சந்நிதானம்: **ஶ்ரீலஶ்ரீ மாசிலாமணி தேசிக, ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்.**

இந்நிகழ்ச்சியில் மேயர் ஆர். பிரியா ராஜன், டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி. இரா.கிரிராஜன் எம்.பி.. சட்டமன்ற உறுப்பினர்கள் : ப.தாயகம்கவி. அ.வெற்றிஅழகன். ஜோசப் சாமுவேல், இ.பரந்தாமன். ப.ரங்கநாதன், இரா.விடுதலை, பகுதி செயலாளர்கள் : ஐ.சி.எப்.வ.முரளிதரன், எ.நாகராசன், தலைமை செயற்குழு உறுப்பினர்கள் : கே.சந்துரு, சி.மகேஷ்குமார். மாவட்ட து.செயலாளர் தேவஜவகர். பொதுக்குழு உறுப்பினர்கள் : சரிதா மகேஷ்குமார். எஸ்.பன்னீர்செல்வம், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள்: துரைகண்ணன், ம.அசோக்குமார்,

ஆர்.எஸ்.சித்திக், எஸ்.தனசேகர், மாமன்ற உறுப்பினர்கள் : சி. ஶ்ரீதணி. என்.தாவூத் பீ, டி.யோகப்பிரியா, பி.அமுதா, கே.சாரதா. பகுதி நிர்வாகிகள்: சொ.பழனி, இரா. இளங்கோவன். எஸ்.கே.ரமேஷ். எல்.டி.தாமஸ், இரா.தயாளன், எம். சாக்ரடீஸ், வி.வெங்கடேசன், ஆர். காஞ்சனா, பி.சூரி, வட்ட கழக செயலாளர்கள் பா.அன்பரசு, டி.சந்திரசேகர், கே.ஜார்ஜ்குமார், என்.பொன்முடி. பி.ஊமைத்துரை, கே.பி. ஆதவன்மணி, பி.டி.சி.எஸ்.ரவி. எஸ்.முருகன், எம்.பி.தமிழ்ச்செல்வன், என்.சௌந்தர், என்.பவுல்ராஜ், என்.இராமச்சந்திரன், எம்.ஜெ.சி. பாபு, பி.அதிபதி உள்ளிட்ட நிர்வாகிகள் பங்கேற்கி ன்றனர்.

கொளத்தூர் சட்டமன்றத் தொகுதி அனைவரையும் வரவேற்கின்றது.



சென்னை கிழக்குக் கடற்கரைச் சாலையில் (ECR), நேற்று முன்தினம் (04.03.2025) திருவான்மியூர் முதல் அக்கரை வரை நடைபெற்று வரும் ஆறு வழித்தடமாக அகலப்படுத்தும் பணிகளை, பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு களஆய்வு மேற்கொண்டார். இந்த ஆய்வின் போது, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அரசு செயலாளர் முனைவர் இரா.செல்வராஜ், நெடுஞ்சாலைத்துறை தலைமைப் பொறியாளர் கட்டுமானம் மற்றும் பராமரிப்பு அலகு கு.கோ.சத்தியபிரகாஷ், மெட்ரோ தலைமைப் பொறியாளர் ச.ஜவஹர் முத்துராஜ், நெடுஞ்சாலைத்துறை சிறப்பு அலுவலர் (தொழில்நுட்பம்) இரா.சந்திரசேகர் மற்றும் துறைச் சார்ந்த அலுவலர்கள், பொறியாளர்கள் கலந்துகொண்டனர்.




# தி.மு.க. இளைஞர் அணி

கலைஞர் 100 1924 - 2023

## ஒன்றிய–நகர–பகுதி–பேரூர் புதிய நிர்வாகிகள் அறிமுகக் கூட்டம்

கழகத் தலைவர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, தலைமைக் கழகத்தின் ஒப்புதலுடன், ஒன்றிய–நகர–பகுதி–பேரூர் அமைப்புகளுக்கு, இளைஞர் அணி அமைப்பாளர்–துணை அமைப்பாளர்களை மாண்புமிகு துணை முதலமைச்சரும், கழகத்தின் இளைஞர் அணிச் செயலாளருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் மாவட்ட வாரியாக நியமித்து வருகிறார்.

மண்டலம்–7 க்கு உட்பட்ட திருவாரூர் மாவட்டத்திற்கு புதிதாக நியமிக்கப்பட்ட இளைஞர் அணியின் நிர்வாகிகளுக்கான அறிமுகக் கூட்டம், மாவட்டச் செயலாளர், ஒன்றிய–நகர–பேரூர் செயலாளர்கள் முன்னிலையில், நடைபெற இருக்கிறது. அதன் விவரம் வருமாறு:

| நாள் | நேரம் | கழக மாவட்டம் | இடம் |
|---|---|---|---|
| 07.03.2025 வெள்ளிக்கிழமை | காலை 9.00 மணி | திருவாரூர் | மலர் மஹால், வடசேரி சாலை, மன்னார்குடி. |



அன்பகம்
தேனாம்பேட்டை
சென்னை–18
நாள் : 04-03-2025


# இன்னும் பல திட்டங்கள் தமிழ்நாட்டுக்குக் கிடைக்க வேண்டுமென்றால், நம் ‘திராவிட மாடல்’ அரசு தொடர வேண்டும் !

# சட்டமன்றத் தேர்தலில் 200 தொகுதிகளையாவது நாம் வெற்றி பெற்றுக் காட்ட வேண்டும்!

## திருவல்லிக்கேணி வழக்கறிஞர் அணி மணிகண்டன்- மதுமிதா திருமணத்தில்

## துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் உரை!





**சென்னை, மார்ச் 6 –**

**சென்னையில், திருவல்லிக்கேணி பகுதியைச் சேர்ந்த முன்னாள் வட்டக் கழகப் பொறுப்பாளர் அன்புவின் புதல்வர் பகுதி வழக்கறிஞர் அணி அமைப்பாளர் மணிகண்டன் - வழக்கறிஞர் மதுமிதா ஆகியோரின் திருமணத்தை, துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நடத்தி வைத்து வாழ்த்துரை வழங்கினார்.**

**அப்போது அவர், மணமக்கள் இருவரும் தமிழ்நாடும் இருமொழிக் கொள்கையும் போல, பெரியாரும் பகுத்தறிவும் போல, அண்ணாவும் மாநில சுயாட்சியும் போல, கலைஞரும் கழகமும் போல, கழகத்தலைவர் அவர்களும் திராவிட மாடலும் போல பல்லாண்டு வாழ்கவென வாழ்த்தினார்.**

திருமண விழாவில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய வாழ்த்துரை வருமாறு:

சென்னை மேற்கு மாவட்டம், திருவல்லிக்கேணி பகுதி வழக்கறிஞர்கள் அணி அமைப்பாளர் தம்பி மணிகண்டன், வழக்கறிஞர் சகோதரி மதுமிதா ஆகியோரின் திருமணத்தை உங்கள் முன் நடத்தி வைப்பதில், நாங்கள் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறோம்.

இந்தத் திருமணம் நம் குடும்பத் திருமணம்போல் சிறப்பாக நடந்து முடிந்திருக்கிறது. இதை ஏன் நம் குடும்பத் திருமணம் என்று சொல்கிறேன் என்றால், நம் சேப்பாக்கம்திருவல்லிக்கேணி பகுதியில் வசிக்கின்ற ஒவ்வொருவரின் குடும்பத்திலும் ஒருவனாகத்தான் நான் இன்றுவரை பழகிக் கொண்டு இருக்கிறேன். அந்த வகையில், தம்பி மணிகண்டன் அவர்களின் திருமணத்தை, நம் குறிஞ்சி இல்லத்தில் நடத்தி வைத்து இருக்கிறோம்.

**சுயமரியாதைத் திருமணம்**

இந்தத் திருமணம் கழகக் குடும்பங்களுக்கு இடையே உரிய வகையில், ஒரு சுயமரியாதைத் திருமணமாக சிறப்பாக நடைபெற்றது. தம்பி மணிகண்டன் வழக்கறிஞராக இருக்கிறார். மணமகள் மதுமிதா சட்டக் கல்லூரியில் பேராசிரியராக இருக்கிறார். மணமகன் சட்டத்தின்படி வழக்குகளை நடத்துபவர். மணமகள் அந்த வழக்கை நடத்துவதற்கு தேவையான சட்டங்களைச் சொல்லித் தருபவர். ஆகவே, தம்பி மணிகண்டன் அவர்களுக்கு நீதிமன்றத்தில் வாதாடும்போது, எந்த பிரச்சினையும் வருவதற்கான வாய்ப்புகள் இல்லை.

தம்பி மணிகண்டன் அவர்களின் தாத்தா பெரியவர் பரமசிவம் அவர்கள் கிட்டத்தட்ட 23 ஆண்டுகாலம் கழகத்தின் வட்டக் கழகச் செயலாளராக, கழகத்திற்காகப் பணியாற்றியவர். அவர் வழியில் மணிகண்டன் அவர்களின் தந்தையார் அன்பு அவர்களும் வட்டக் கழகச் செயலாளராக கழகத்திற்கு உழைத்தவர்.

**வழக்கறிஞர் அணி**

தன் தாத்தா மற்றும் அப்பா வழியில் தம்பி மணிகண்டன் அவர்களும் கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டு வழக்கறிஞர் அணியின் பகுதி அமைப்பாளராக சிறப்பாகப் பணியாற்றிக் கொண்டு இருக்கிறார். அதிலும், கூடுதல் சிறப்பு என்னவென்றால், இப்போதுதான் கேள்விபட்டேன் இது காதல் திருமணம் என்று. காதல் திருமணம் மட்டுமல்ல, இது ஒரு கலப்புத் திருமணம்.

இருவீட்டார் சம்மதத்தோடு இன்று நடக்கின்ற திருமணம் இது. காதல் திருமணத்தில் என்னென்ன பிரச்சினைகள் வரும் என்பது எனக்கு நன்றாகத் தெரியும். மணமகன் வீட்டில் ஒப்புக்கொண்டால், மணமகள் வீட்டில் ஒப்புக்கொள்ள மாட்டார்கள். மணமகள் வீட்டில் ஒப்புக்கொண்டால், மணமகன் வீட்டில் ஒப்புக்கொள்ளமாட்டார்கள்.

பெரும் போராட்டத்திற்குப் பிறகு இரண்டுவீட்டிலும் ஒப்புக்கொண்டார்கள் என்றால், திடீரென்று பிரச்சி னையை ஏற்படுத்த உறவினர்கள் கிளம்பி வருவார்கள். இதையெல்லாம் தாண்டிதான் இன்று இந்த மணமக்கள் இருவரும் நம் அனைவரின் அன்போடும், ஆசீர்வாதத்தோடும் திருமண வாழ்வில் அடியெடுத்து வைக்கிறார்கள்.

**வெல்வோம் 200; படைப்போம் வரலாறு!**

இங்கு வந்திருக்கின்ற ஒவ்வொருவரிடத்திலும் நான் கேட்டுக்கொள்வது, அனைவரும் மகிழ்ச்சியான தருணத்தில் கூடி இருக்கிறோம். இன்னும் சரியாக ஒரு வருடத்தில் தமிழ்நாட்டில், 2026ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தல் வர இருக்கிறது. அந்தத் தேர்தலுக்கு நாம் இப்போதே தயாராக வேண்டும்.

கடந்த நான்கு ஆண்டுகளில் நமது ஆட்சியில், நம் கழகத் தலைவர் அவர்கள் என்னென்ன திட்டங்களைத் தீட்டி இருக்கிறார் என்பதை ஒவ்வொரு வாக்காளரையும் சந்தித்து, அவர்களிடத்தில் திட்டங்களைப் பற்றி நாம் எடுத்துச் சொல்ல வேண்டும். பல்வேறு திட்டங்களை நம் தலைவர் அவர்கள் நிறைவேற்றிக் கொடுத்து இருக்கிறார்.

மகளிருக்கு கலைஞர் மகளிர் உரிமைத்தொகைத் திட்டமாக இருக்கட்டும், கல்லூரி மாணவிகளுக்கு புதுமைப் பெண் திட்டமாக இருக்கட்டும், மாணவர்களுக்கு தமிழ்ப்புதல்வன் திட்டமாக இருக்கட்டும், ஒன்றாம் வகுப்பிலிருந்து ஐந்தாம் வகுப்புவரை படிக்கின்ற அரசுப் பள்ளி மாணவர்களுக்கு முதலமைச்சர் காலை உணவுத் திட்டமாக இருக்கட்டும், மக்களைத்தேடி மருத்துவம், இல்லம் தேடி கல்வி, மகளிருக்கு விடியல் பயணம் திட்டம் இப்படிப் பல திட்டங்களை நம் முதலமைச்சர் அவர்கள் நிறைவேற்றி இருக்கிறார்.

இந்தத் திட்டங்கள் எல்லாம் தொடர வேண்டும் என்றால், இன்னும் பல திட்டங்கள் தமிழ்நாட்டு மக்களுக்கு கிடைக்க வேண்டும் என்றால், நம் திராவிட மாடல் அரசு தொடர வேண்டும். அதற்கு வருகின்ற 2026ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலில் தலைவர் அவர்கள் சொன்னதைப்போல் 234 தொகுதிகளில் 200 தொகுதியையாவது நாம் வெற்றிபெற்று காட்ட வேண்டும்.

அதற்கு இந்த சேப்பாக்கம்திருவல்லிக்கேணித் தொகுதி ஒரு முன்மாதிரி தொகுதியாக அமைய வேண்டும். தலைவர் அவர்கள் யாரை உங்களிடத்தில் வேட்பாளராக நிறுத்தினாலும், அவரின் வெற்றிக்கு நீங்கள் உழைத்து, வெற்றியை உறுதிசெய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**சுயமரியாதையோடு வாழ வேண்டும்!**

மணமக்கள் இருவரும் நன்கு படித்தவர்கள். அவர்களுக்கு அதிகமாக நாம் அறிவுரை சொல்லத் தேவையில்லை. அறிவுரை சொன்னாலும் அவர்களுக்குப் பிடிக்காது. அவர்களிடம் நான் கேட்டுக் கொள்வதெல்லாம் ஒரே வேண்டுகோள்தான். திருமண வாழ்வில், அடியெடுத்து வைத்த பிறகு நல்ல நண்பர்களாக, சுயமரியாதையுடன், ஒருவரையொருவர் புரிந்து கொண்டு வாழ வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். உங்களுக்கு பிறக்கின்ற குழந்தை ஆண் குழந்தையாக இருந்தாலும் சரி, பெண் குழந்தையாக இருந்தாலும் சரி, அழகான ஒரு தமிழ்ப் பெயரை சூட்ட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மணமக்கள் பல்லாண்டு காலம் வாழ்க என்று வாழ்த்தி, இந்த வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.

இவ்வாறு அவர் பேசினார்.

**பங்கேற்றவர்கள்**

சென்னை மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் நே.சிற்றரசு, திருவல்லிக்கேணி பகுதிக் கழகச் செயலாளர் ஏ. ஆர்.பி.எம்.காமராஜ், கழகப் பொதுக்குழு உறுப்பினர்கள் கமலா செழியன், ரவி ராஜ்குமார், தலைமைச் செயற்குழு உறுப்பினர் வி.என்.ராஜன், இளைஞர் அணி மாவட்ட அமைப்பாளர் பிரகாஷ், வழக்கறிஞர் அணியின் மாவட்ட அமைப்பாளர் தேவேந்திரன், வட்டக் கழகச் செயலாளர் மோகன், பகுதி துணைச் செயலாளர் பத்மாவதி, வழக்கறிஞர் அணியின் மாவட்டத் துணைத் தலைவர் பாலச்சந்தர், வழக்கறிஞர் அணியின் மாவட்டத் துணை அமைப்பாளர் கமலக்கண்ணன், பகுதிக் கழக அமைப்பாளர் அர்ஜுனன், பகுதி தலைவர் ஜெயப்பிரகாஷ், பகுதித் துணை அமைப்பாளர்கள் தமிழச்செல்வன், வெங்கடேசன், வினோத்குமார், திவாகர், ராஜேஷ், முரளிதரன், இளையராஜா உள்பட கழக முன்னணியினர் பலரும் கலந்துகொண்டனர்.